

சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று முன்தினம் (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு காங்கிரஸ் சட்டமன்றத் தலைவர் செ. ராஜேஷ் குமார், தமிழ்நாடு காங்கிரஸ் ஊடகத் துறை தலைவர் எ. கோபண்ணா ஆகியோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்கள்.



சென்னை, கோபாலபுரம் இல்லத்தில், நேற்று முன்தினம் (11.10.2024) முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு, திரைப்பட இயக்குனரும், நடிகருமான எஸ்.ஏ.சந்திரசேகர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

### மாணாக்கர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில்

# பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேச்சு!



புதுக்கோட்டை அக்.13-

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் மற்றும் கீரமங்கலம் பேரூராட்சி பகுதிகளில், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் (10.10.2024) அன்று வழங்கினார். பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணாக்கர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் இல்லம் தேடி கல்வித் திட்டம் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம், உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 429 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

அதன்படி, கீரமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 178 மாணவிகளுக்கும், கீரமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 148

மாணவர்களுக்கும், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், அணவயல் எல்.என். புரம் அரசுமேல்நிலைப்பள்ளியில் பயிலும் 54 மாணவர்களுக்கும், 49 மாணவிகளுக்கும் என ஆகமொத்தம் 429 மாணாக்கர்களுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

இந்த விலையில்லா மிதிவண்டிகளை பெற்றுக் கொண்ட மாணாக்கர்கள் அனைவரும் இதனை நாள்தோறும் பள்ளிக்குச் சென்று வருவதற்கு பயன்படுத்துவது உடல்நலத்திற்கு மிகச்சிறந்த உடற்பயிற்சியாக அமையும் எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் (பொ) கே. ஜெயந்தி, ஒன்றியக்குழுத் தலைவர்கள் வள்ளியம்மை தங்கமணி (திருவரங்குளம்), மகேஸ்வரி சண்முகநாதன் (அறந்தாங்கி), பள்ளித் துணை ஆய்வாளர் இளையராஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.


கண்ணீர் அஞ்சலி



எனது ஆருயிர் நண்பர்
திரு. முரசொலி செல்வம் அவர்களின்
மறைவால் வாடும் அவரின் குடும்பத்திற்கு
எனது ஆழ்ந்த இரங்கலைத்
தெரிவித்துக் கொள்கிறேன்

டாக்டர் கோ. விசுவநாதன்
நிறுவனர் மற்றும் வேந்தர்
வி ஐ டி பல்கலைக்கழகம்








கண்ணீர் அஞ்சலி



திராவிட இதழியலின் தீச்சுடர்
திராவிட இயக்கக் கொள்கைத் தூண்
திரு. முரசொலி செல்வம் அவர்களுக்கு
எங்களின் கண்ணீர் அஞ்சலி
ஆழ்ந்த இரங்கல்

PROF. DHANAPALAN COLLEGE OF SCIENCE & MANAGEMENT
AFFILIATED TO UNIVERSITY OF MADRAS

Thiru. Pugalendhi Dhanapalan
Chairman
Prof. Dhanapalan College of Science and Management
Chennai.